**தலைப்பு 236 – அரச கரும மொழிகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 236 – அரச கரும மொழிகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 30 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 136.25 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 129.46 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்தினது மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 6.79 மில்லியன் அதாவது 5 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 96.65 | 90.88 | 5.77 | 5.97 |
| மூலதனம் | 39.60 | 38.58 | 1.02 | 2.58 |
| மொத்தம் | 136.25 | 129.46 | 6.79 | 4.98 |

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 7.83 | 5.54 | 3.83 | 5.58 | 25.00 | 15.98 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 7002/0000/00/0272/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 1.94 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 6000/0000/00/0001/0087/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் மீதி ரூபா 0.06 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

11 செலவின விடயங்களுக்காக ரூபா 1,304,218 கூட்டுத்தொகையான மிகை நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களின் தேறிய நிதிஏற்பாட்டில் 11 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

23601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 நவம்பர் மாதத்தின் போது மருத்துவ விடுமுறை பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 74,116 தொகையான இடர் கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயலாற்றல்**

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மொழித் திறனை பெற்றுக்கொள்வதற்காக வசதிகளை வழங்குவதற்காக "e" Learning என்ற தொலைக்கல்வி முறைமையை தனியார் நிறுவனமொன்றுடன் இணைந்து அரச கரும மொழிகள் திணைக்களத்தால் 2014 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 800,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 721,497 தொகை பயன்படுத்தப்பட்டு மொழி ஆய்வுகூடத்திற்கு கணணி, உபபாகங்கள் மற்றும் அலுவலக தளபாடப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னர் அச்சிடப்பட்ட மும்மொழி அகராதியில் சிங்கள தலைப்பில் வசனங்களுடன் 808 அகராதிகளும், தமிழ் தலைப்பில் வசனங்களுடன் 1096 அகராதிகளும் விற்பனை செய்யப்படாமல் எஞ்சியிருந்தன. எனினும் மேம்படுத்தப்பட்ட சிங்கள, தமிழ் தலைப்புடனான வசனங்களுடன் மும்மொழி அகராதிகளில் 1000 பிரதிகளை அச்சிடுவதற்கு 2015 திசெம்பர் 01 ஆந் திகதி ரூபா 6,438,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2016 யூலை 08 ஆந் திகதி வரையிலும் அந்த அச்சிடப்பட்ட அகராதிகள் திணைக்களத்திற்குக் கிடைத்திருக்கவில்லை

(ஆ) 2015 திசெம்பர் 15 ஆந் திகதி பணம் செலுத்தி கட்டளையிடப்பட்ட I ஆம் மட்டத்தில் 5,000 சிங்கள புத்தகங்களையும் II ஆம் மட்டத்தில் 5,000 சிங்கள புத்தகங்களையும் குறைத்து 5000 சிங்கள அரிச்சுவடி புத்தகங்களும், 5,000 தமிழ் அரிச்சுவடி புத்தகங்களும் அச்சிடுவதற்கு கட்டளையிடுதல் "நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செய்யப்பட்டதாக அரச கரும மொழிகள் ஆணையாளரினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது." எவ்வாறாயினும், கட்டளையிடப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது உரிய தீர்மானம் எடுக்கப்படாமை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

**3.5 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 06 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 58 | 13 | 45 |
| (iii) | இரண்டாம் நிலை | 154 | 129 | 25 |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 14 | 05 |
| | மொத்தம் | 242 | 162 | 80 |